முருகன் துணை.

கதிரேசன் பேரில்

ஆனந்தக்களிப்பு.

பெரிய எழுத்து



சென்னை-சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1931. [அணா-6
நெ. 189, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

உ

சி.....

பெரி. அரு. அள.

வள்ளியப்ப செட்டியார்

நா-புதூர்

Kanikuti

Raman

உ

வேலுமயிலுந்துணை.



கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.

காப்பு.

குரு விருத்தம்.

வெத்திமாமயில் வேலர்மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள் திருமாமத
அத்திமாமுக னைங்கரன்காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தனா தந்த னாதந்த னானா.

சீர்மேவுங்கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானைமணவாளன் மீதிலென்னாளும்
பார்புகழவே துதி சிறக்க-எங்கள்
பாரமதையானைமுகன் றன்னருள்பெருக்க

தானடந்தநடனமயி லேறுஞ்-சுவாமி
சரஹணபவானந்தன் மீதிலருள்சேரும்
ஆனந்தக்களிப்பிதனைப் பாட-கையிலே
யாளிமலரடியை நா னனுதினந்தேட
சதுர்முகன்தேவி நயந்தரவே-யிந்தத்
தாரணியிலுகந்தகவி வாணர்ஜெயம்பெறவே
கதிர்காமமானகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணரருளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம்
திகைமெய்த்தபுகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகுயாபார தர்மமதுவாழும்
வசியகுலநகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள்கதிரேசன் சன்னதியில்நானே
சொன்னகவிதன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள்வாராம லென்னையுமேகாத்த
நன்னயமிகுந்த தெய்வானையம்மன்
நற்கமலரடியிணையை நான்துதிப்பேன்.
அருமறைகள்புகழ் துதிகள் பூணும்-வள்ளி
யம்மையென்கவிதனக் கருள்தரவும்வேணும்
குருமுனியைப்பணிந்துகவி கூற-அதற்கு
குறைகளொன்றும்வாராமல் சபையிலரங்கேற்ற
சீதையால்ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்பசயனஞ்செய்த திருப்புல்லாணியிலே
நாதனருள்கங்கைகுல சீலன்-தங்கம்
ராமசாமிசொன்ன கவிக்குகந்தவேலன்
எச்சரிக்கையென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங்காவடிகள் நின்றுவிளையாட
பச்சைமயிலேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத்தென்கலி யகற்றும்வடிவேலன்
தென்கதிர்மானகர் விளங்கவந்த
தேவாதிதேவாஜெயங் கூறியேமுழங்க
அன்பானசன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுகவேலருட மாபதிதுலங்க
முன்னாலேகோபுர முகப்பும்-எங்கள்
முருகேசன்கோவில்முழுச் செம்பால்வகுப்பும்

அன்னமெனும்தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந்தடித்துவிளை யாடிடுங்கூடம்
மூதண்டயோகபதி யேறும்-திரை
முத்துலிங்கசுவாமியுட சன்னதியைப்பாரும்
நாதமொடுகீதமு முழங்க-வசிய
நகரத்தார்கட்டிவைத்த சத்திரம்விளங்க
காணிக்கைகொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன்சன்னதிக்கி வருவார்கள்தேடி
மாணிக்ககெங்கைநீ ராட-இங்கே
மாதவர்களும்மனிதர்களும் வந்துநிதங்கூட
பொன்னலங்காரநகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்றநவரத்ன மேவிளையுந்தேசம்
சொர்னமிகுகதிரவள மெத்த-தோழி
சொல்லுகிறேன்நாட்டுவளம் வானுலகுதித்த
இந்திரனுடயேவலதி னலே-வந்த
ஏழுமேகமுமொன்று கூடியேமேலே
சந்திரனெனவாகவுமே வோங்கி-சத்த
சாகரமதில்தாவி தண்ணீரைவாங்கி
மாலெனவிசும்பிடை படர்ந்து-முகில்கள்
மண்டியேகெர்சித்து மின்னலுமடர்ந்து
நாலுதிசைநாடியே தெளிந்து-கதிரை
நகர்பூமியெங்குமழை மாரிகள்பொழிந்து
ஏரிகுளம்வாவிகள் நிறைந்து-வயல்க
ளெங்கெங்குமேகன்னல் சென்னலும்வளர்ந்து
வீரியமிகுந்த தத்தின்-நல்ல
வெண்கமுகுசோலைமலை மேலெங்குந்தோண
தனியேபழுத்திரு மாவும்-இதனில்
தாவியொருகொம்போடே கொக்குகளுமேவும்
இனியமலர்வாசனைகள் தேடும்-வீறென்
திருபத்துநாலுகால் வண்டினங்கூடும்
நாகமதுநாகமதி லேறும்-துய்ய
நாகமேபுனைந்தசில மாதரையும்பாரும்
நாகமலர்சோகுமலர் முல்லை-யிந்த
நாட்டினிலேகலைபகடுக் கொருகொம்புமில்லை

முல்லையிருவாட்சிக ளெடுத்து-அந்த
முல்லையிலேயில்லில்லா மடவார்தொடுத்து
வல்வினை தீரவெனத் தேடி-மாது
வள்ளிதெய்வானைக் கிடுவார்கள்தோடி
சதுர்மறையும்புகழ்தேவ ரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை
இதிலே நீராடுவது சித்தி-ஜென்மம்
ஈடேறுஞ்சாயுச்சிய பதவியிலேமுத்தி
கோலமாமலையழகைப் பாரும்-கதிரை
குமரேசனருளாலே வல்வினைகள்தீரும்
மூலகணபதிக்கிளைய வாகன்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன்
மாமேவும்புலிபுகழுந் தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனு லளவிடமாட்டான்
பூமேவுங்குழல்வள்ளி நேயன்சுவாமி
புண்ணியன்தேவருக்கும் மனிதருக்கும்நாயன்
பச்சைமால்தனக்குமரு கோனே-சுவாமி
பழனிமலைமீதினிலே மேவுமுருகோனே
வச்சிராயுதன் தம்பி மருகா-உந்தன்
மலரடியெனக்குநிதந் தரவேணுமுருகா
நவவீரர்துணையான குகனே-நம்பி
நாராயணன்றங்கை யபிராமிமகனே
நவமணியணிந்த வொளிமூவா-நின்று
நடனமிடுமயிலேறி யெனைவந்துகாவா
கனக்குண்டலமிட்ட நீதா-சுவாமி
கார்த்திகேயாலட்சம் படைவீரர்தானே
தனமேருபாக்கியமருள் வேலா-எங்கும்
சர்வபரிபூரணு னந்தசிவபாலா
ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன்
ஈராறுபன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்குமேதுதி மிகுந்தமெய்யாண்டி
ஆண்டிடோன்னுண்டிசிவ னுண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனுண்டி

ஆண்டிமகனுண்டியிவ னுண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றுண்டி
சிக்கல்புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிக்குடி குன்றைக்குடியாண்டி
மிகத்திருவேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னறுமுகந்தாண்டி
சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலையாண்டி
வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா
விடவரவுபடமும்விசை கெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென பகஜமுமசைபடவும்
கடல்சுவரகதிர்மதி கலங்க-தாவி
கனவேகமாகவரு மயில்மீதிலங்க
மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெறித்தமுருகையா
சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும்
ஆகவேநின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளரவா வேணுங்குருநாதா
தாகமாயிருக்குதுனைக் காண-கந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண
அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம்
அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தாநமாவோம்
அரகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம்
அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம்
மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம்
மயிலேறும்கந்த நமாவோம்-வட்ட
வடவாலில்மேவுபால் மருகாநமாவோம்

மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவே நமாவோம்
மயிலேறுகின்ருய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய் நமாவோம்
திரிபுரபவா நமாவோம்-வாலை
சேயனே திகழொளி பவாவா நமாவோம்
பரிபுரபவாபவா நமாவோம்-வள்ளி
பாகனேபவனுெழி பவாவா நமாவோம்
சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியேசயலொழி பவாவா நமாவோம்

தருமதுரையே நீரு மென்னை-நல்ல
தருணமிது தரணிந்த வேளையிலேயென்னை
காவாவுன்னிரடிகள் தன்னை-நான்
கண்டெனதுகலிதீர் வந்துமென்முன்னை
வாவென்றுசொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ
தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைந் தீர்ப்பாயெனக்கு
அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகிலாண்டகோடி பிர்ம்மாண்டநாயகனே
உன்கிருபைதந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும்
அன்புபெரும்வரைராஜன் போர-சுவாமி
அடியேனுன்னடியிணையைக் காண நீராரா
வாவாயென்றேவா நீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவா வெனத்தொழுது நின்றே
எவன்றேடினுலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக்கவிபாடி ஞலும்பாடட்டும்
நமக்கென்னவென்றிருக்கி றீரோ-சுவாமி
ஞாயமோ நானுமுறை யிட்டதறியீரோ
உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாயிப்போது
ஐயா நீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலே

மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர்
தவயோகக்காரரவெகு வெள்ளம்-ஞானந்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம்
அவர்களைப்போல்நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவிலையோ
அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ
என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிகளாக வென்னையுமேசேர்த்து
ஆளாக்கியாளர லாகாதோ-எந்த
னகந்தணிலே நீயிருந்து வாழலாகாதோ
பாழானமனங்குவியு திலையோ-யென்ன
பாவமோவதிலிருக்கும் பிசகுதெரியவிலையே
வஞ்சகமில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலிடதூதரெனை வருத்தாமல்காரும்
அஞ்சுதலையாரளுந் துரையே-உமக்கு
அஞ்சுவலையால்வேத னிருந்ததுவுட்சிறியே
ஆறுதலை கண்டரண்டய்யா-பின்பு
ஆறுதலையாய்ப்பதியை யாண்டாரேமெய்யா
ஆறுபடைவீட்டுக் கதிகாரா-வந்த
அசுரருடனஞ்சாத போர்புரியும்வீரா
சத்தியுமைபாலகனே சாமி-எந்தன்
தாசனுக்குத்தாசனெனைக் காப்பதற்கேமி
சுத்தபரிபூரண வுன்னை-ஓதி
துதிக்குமடியார்க்கடிமை யாகவருளென்னை
பொய்யாதவாழ்வருளாய் வேலா-கந்தை
ஐயாவேயெனையாளுந் தேவாதிதேவா
ஒய்யாரமான முருகோனே-வந்த
உற்பவமெனுந்துதியை செப்புவேனுனே
உரமானவசுரரிட ராலே-தேவ
ரோடிமுறையிட்டாரே கைலைமலைமேலே
அரனசுரர் மேற்கோபமாகி-கைலை
யாளிவிழிதனிலேயொரு பொறிசித்றியேகி

சரஹணப்பொய்கையிலமர்ந்து அதுவுஞ்
சந்திரோதயம்போலே பாலனெனவந்து
உருவாகிமலர்மீதிலரனார் எங்கள்
ஓம்நமசிவாயரெனும் பரமனருள்மகனார்
அப்பவேசென்னியோ ராருய்-மெத்த
வழகானசெந்திரு புயங்களீராருய்
உற்பவமான பனிரண்டு விழிகள்
எளிவாகிவோராறு பெண்கள்பாலுண்டுணு
அயனையுஞ்சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்குவுபதேசஞ் சொல்லியேகொடுத்தான்
கயமுகாசூரன் முதலோரை-கந்தன்
கைவேலினுலவர்கள் கருவறுத்தாரே
தங்கவடிவேலலங் காரன்-மாது
தையல்தெய்வானைமண மேவுசிங்காரன்
தென்கதிரைமான்க ரிலங்கும்-சுவாமி
சிங்காரமாயுனது வருள்கிருபைபொங்கும்
சித்தமுமகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில்வேலன்
சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள்கலீரென வேவந்தருளும்நடையான்
கடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன்திருவிழா பவனிவருகையிலே
கடல்போலபேரிகை முழங்க-விருது
கட்டியமிருபுறமு மருகேகயங்க
செங்காவிப்பட்டாலே கோடி-கொடிகள்
ஜெண்டாவுமாலவட்டக் குடைகள்பலகோடி
மங்காதசாமரைகள் கோடி-வீசி
வருவார்கள்நடனமிடு மடமாதர்கோடி
சேர்க்கையாய் முரசுசங்கூத நல்ல
செந்தீவளர்ப்பவர்கள் நான்மறையோத
பார்க்கவெகு மாமுனிவர்வரவே-கவிகள்
பாடியேவரகரா வென்றுபுகழ்பெறவே
ஆணிப்பொன் மாலைகளிலங்க-மொய்த்த
அழகான்வாலாத்தி தீபமேதுலங்க

மாணிக்கப்பேழையி லுகந்தார் கந்தன்
மதயானை மேலேறியே பவனிவந்தார்
மதகரியோர் வருகிறதைப்பாரும்சுவாமி
மாணிக்கப்பேழையி லுகந்ததையும் பாரும்
கதிர்காம திருவிழாநேர்த்தி எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ்சாத்தி
கரியுலவு வனமூடுசென்று செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீராறுப்பென்று
சரியான பௌரணையை நாடி கந்த
சாமிசங்கீதபரி வாரமுடன்கூடி
வாரிபோல் பெருகி நீரோடிவார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி
கூரான வடிவேல்சுமந்து எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து
புள்ளிமயில் வேலாவிரைவாக சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குளேக
வள்ளியம்மைதனை சுவாமிதனைக் கண்டு வாரு
மணவாளரென்று பணிந்தன்புகொண்டு
சித்ரமணி மலரணையில் தாவி நல்ல
செங்கமலக்கரத்தா லணைத்திலர்கள் மேவி
கொத்துமுத்துநத்துவிளை திருத்தி இவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள்பொருந்தி
இங்கிர்த மணுளகுண நீதா யெனக்கு
இனியேசுகபோகமத லீலாவிநோதா
எங்கள்குலம் விளங்கவந்த நேசா சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா
அத்தைபெற்ற முத்தேயெங்கோனே யென்ற
ஆரணங்கையுபசரித்து தேனேயம்மானே
முத்திரையிட்டிலங்கு கொங்கையாலே வள்ளி
மோகனமேயென்றந்த வேலவர்கையாலே
கலந்தணைந்த சுகந்தமண வாசன் எங்கள்
கட்டழகிவள்ளிதனை பார்த்துமதபோஜன்
சலதரத்தைப் பழித்தகுழலாளே இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே

எந்தனுக்கிசைந்த மனையாளே வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக்குகந்ததுணையாளே
வந்துவெகுநேர மாகுதடி யெந்தன்
மாதுதெய்வானையெனத் தேடிடுவாள் நாடி
போய்வாறேன் விடை தாடியென்ன வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமி நீர்சொன்ன
வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு நான் [ச்சு
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபே
அங்கேபோய் செலுத்துமதிகாரம் யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம்
இங்கிரண்டு நாளிருந்துபோனால் சுவாமி
என்னகுறை வாகிவிடுங் காணுமுமக்கதனால்
என்மனைவி யிருக்கையிலே யவளேன் உம்மை
யேன்தேடவேண்டியது உம்மை
உண்மையெனக் கின்னதென்றுதானே சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே
இங்கேவந்து நானிருப்பதாலே யென்னை
யெங்கேயோவென்றுதெய் வானையொருக்காலே
மங்கையருந்தேடுவா ளின்று யெனக்கு
வள்ளி நீ விடைதரடி போய்வாறேனென்று
இவர்கூற வள்ளிமின்னுளே சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளை
அவசர முமக்கென்ன யங்கே சுவாமி
ஆனாலு நீர்போக சம்மதியே னிங்கே
கூடாது உம்மைவிடமாட்டேன் மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன்
தேடியிங்கே தெய்வானைவரட்டும் யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகை நீட்டும்
பார்த்தோதடி வள்ளிமானே சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே
ஆத்திர முனக்கென்ன போடிதெய்வ
யானைக்கு நிகராவரோ பெண்கள் கோடி
சொந்தமாய் கிருபைபாராட்டி அந்த
தோகையரைப் பருவமதில் தான்மாலைசூட்டி

வந்தபடியாலவ ளுனக்கு முந்தி
வந்தவளுமானதால் நானுமவளுக்கு
அடக்கமாயிருப்பதுவே சிலாக்கியம்
ஆனாலுமில்லறத்துக் கதுதானே யோக்கியம்
மடற்கொடிதெய் வானையவளிங்கே நானும்
வந்தவகைதெரியாது தேடுவாளங்கே
போகவிடைதாவென வதட்ட எங்கள்
பூவையெனுங்குறமாதுக் கதிகோபமூட்ட
மாகனகமேடையி லிலங்கும் உமது
மனையாட்டிமூத்தகுடி யாளெனவிளங்கும்
தெய்வானைசொந்தமாய் போச்சோ நானுந்
திருட்டுத்தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ
கைமாயஞ்செய்தோமோ நாங்கள் ஒருவர்
காணுதேமாலையிட்டு வந்தீரோவுங்கள்
சாதியா ரேசுவாரேகாண் நீருந்
தலைமறையயென்மனைக்கி வருவானே என்னகாண்
ஆதியிலேயெனையு நினைத்து வந்த
தறியாளேதெய்வானை யும்மையுமழைத்து
கூட்டிவந்தநாதரைக்கேளும் வனத்தில்
குளத்தருகிலேமிருந்த கரடிபுலிவாழும்
காட்டினிலுமக்குதவிசெய்தார் வுங்களண்ணன்
கணபதியைக்கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வர்
வாதலங்கள் செய்சபைமுன்னுலே வைத்து
தெய்வயானை யைத்தாலி கட்டினதினுலே
அவள்மாத்திரஞ் சொந்தக் கிளேயோ சுவாமி
ஆனாலும்தான்கிழங்கு முகமிருக்கவிலையோ
வள்ளியிவைசொல்லவே திகைத்து சென்னல்
வளமானதென்கதிரை வேலனும்நகைத்து
கள்ளிபோல் வீணிரையாதே பொல்லாக்
கசடானகுறவருட சாதியொளியாதே
இரண்டுசமு சாரமாகாது யென்று
நீணிலத்திற் சொல்வது சரியானதோது
வண்டர்குல மானேயுனை நாடிவந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி

நில்லு நான்போய்வாரே னென்றுசொன்ன
நினைவறிந்து வள்ளியவள்சீறியெதிர் நின்று
வல்லபமுமக்கென்ன காணும் எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும்
என்சமர்த்தைப்பாருமினியென்றே வள்ளி
இடைதனிலேசேலையை யிருக்கியெதிர்கொண்டே
அன்புறநெருங்குவது கண்டார் வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார்
சொல்லுகிற சமாச்சார மென்ன உமது
தொழிலைநான் னெடுகிலு மறித்துமினியென்
நல்லதினி மேற்கொண்டுபார்ப்போம் உமது
ஞாயமதை தேவசபையிலே சொல்லிக்கேழ்ப்போம்
தேவசபையிலே சொல்லிப்பாரு அவர்க்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு
ஓவியமேஉன்னுறுதிகேட்க யெழுதும்
உடன்படிக்கைமுறியுண்டோ கொண்டாடிபார்
உடன்படிக்கைமுறியெழுதி தாரேன் வள்ளி
யுனக்கேவல் செய்தற்கு உன்பிறகேவாரேன்
கடக்கலெனைத் தள்ளாதேமானே யென்று
கட்டிமுத்தமிட்டது கசப்பேறுவானே
தனியே வனத்திலிருபேருங் கூடுஞ்
சையோகவேளையிலே பார்த்தென்னை நீரும்
இனியசெந்தேனே கற்கண்டே உந்த
னிதமொன்று சொன்னதுவு மில்லையோவுண்டோ
முன்னிருந்த யினிப்பென்னபோச்சோ யிப்போ
மூத்தகுடியாளுமக்குச் சக்கரைபோலாச்சோ
என்னை நீர் வகைசொல்வதேனோ சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ
தந்தையுங்கள் தேட்டையெடுத்தாரே எங்கள்
சாதியார்வந்துநிதந் தின்றுகொடுத்தாரோ
எந்தனுற்குறைகளேதுண்டோ சுவாமி
இழுக்கெந்தசாதியிலு மில்லாமலுண்டோ
மங்களகல்யாணமதில் நல்லாள் அந்த
மணவறையி லென்தகப்பனிட்ட நகையல்லால்

உங்களிடம்வந்தநாட்கொண்டோ யெனக்கு
ருத்திராட்சவடத்துக்கொரு நவமணியுமுண்டோ
மாதிவை யுரைக்கமுதையன் வள்ளி
மங்கைதனைப் பார்த்தேது சொல்வார்மெய்யன்
ஏதடி நீபேச்சதிகங் கொண்டாய் வள்ளி
யென்னுடையசாதியி லிழுக்கென்னகண்டாய்
குபேரன்மகள்போல பேசாதே உன்னப்பன்
கொடுத்துவிட்ட வரிசைகளை வெளியேசொல்லா
சபையார்களென்னவறியாரோ யிந்த [தே
தாரணியிலுள்ளவர்களெவருமரியாரோ
உடுத்திவந்ததுணிக்கி வேறுண்டோ களிப்பு
ஊறியபித்தளை யோலைக்கிவேறுண்டோ
தொடுத்திருந்த கருகமணியோடே யென்னை
துடர்ந்துவரும்போதுனக் கேதுபட்டாடை
வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ் சுத்த
வாணியர்கள் யெண்ணையிட்டறியாததலையும்
புண்ணுக்குபோலிருக்குமேலுங் காட்டில்
புரண்டசெடிமுள்ளிழுத்து சுரண்டிடவிட்டாலும்
எப்போதுங்காய்கிழங்கை தின்று நீயும்
யிருந்தகதிதெரியாதோ வரும்போதென்பின்னும்
அப்பவேநானழைத்துத்தந்து நல்ல
வாபரணமானதையு மழகாயணிந்து
செம்பவளமாளிகையமைத்து உனக்கு
செங்கமலத்தாதிகளை யேவல்நேமித்து
நம்பிநான் செய்ததைமறந்து வள்ளி
நாயகமேபேசுவது மென்னடியிகழ்ந்து
மாதே நீபதராதேவாடி யெந்தன்
மனமுழுதுமறியாமல் சொல்லாதேபோடி
தோகையேஇதுவென்னமூர்க்கம் உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம்
சாராயங்கள்ளுகள் குடித்து குறவர்
சந்திக்கி சந்தியே சண்டைகள்பிடித்து
பூராயம்தெரியாமற்கத்தி கண்ட
பூனைகளையெரிவாரே முசலென்றுகுத்தி

தின்பதுவுமுண்டதிகமாக குறவர்
சேரியிலே நீபழகி வந்தவகைபோக
செம்பவளவாயாளே யென்றுசுவாமி
செப்பவேவள்ளியவள் வெஞ்சினங்கொண்டு
விண்ணணம்பேசுவது சீரோசுடலை
மீதிலெலும்பானதுவை தின்றதுவுமாரோ
கண்ணப்பனெச்சிதிங் கலையோசிவனுங்
கரிக்காகப்பாலகனைக் கொன்றதுவுமிலையோ
புத்தியுமக்கில்லாதே போமோ கெட்ட
யினக்குறவர்பெண்ணை நீர்சம்மதிக்கலாமோ
யெத்திசையும்புகழ்பெற்ற நாதா வென்று
யிவள்சொல்லும்வகைகண்டு கூறுவார்தோதா
அடந்தேருவார்குடிமிகுத்தால் குறவர்
அவர்தனக்கே சிலவுக்கில்லாதிருந்தால்
கடன்வாங்குவார்சம்மதித்து தாலி
கட்டியபெண்டுகளை யீடாகவைத்து
குடுத்துவிட்டபணத்துக் கீடாகவைத்த
குறத்திகளைப்பணங்கொடுத்த குறவன்வெகுவாக
அடுத்தவனைய னுதினங்கூடி யிவர்கள்
அஞ்சாறுபிள்ளைகளைப் பெற்றபின்தேடி
பணங்கொடுத்துத் தருப்புகிறபோதுபெற்ற
பாலரையுங்கூடவே கூட்டியவள்மாது
குணமாகமுன்னிடுவைத்த பழைய
குறவனுடன்போவதுங்கள் சாதியிலேமெத்த
இதுபுதுமையிவ்வுலகிலுண்டோ வள்ளி
யேந்திழையேயிதைவிட லெச்சைவேறுண்டோ
கதிகொண்டமயில்வாகனத்தார் இந்தக்
கதைசொல்லவேவள்ளி யவளெதிருரைத்தாள்
குறத்தியென்றுயெனக்குவகைபுரியுஞ் சுவாமி
கும்பர்முனியாலுங்கள் சேதிகொஞ்சம்தெரியும்
மறந்தீரோ நீரறிந்ததிலையோ என்னப்பன்
மலைவேடன்மகளைப்போய் மாலையிட்டதிலையோ
சிந்தைமகிழ்ந்தொருபெண்ணைத் தூக்கி உங்கள்
சிவன்தலையில்வைத்துமே சுமந்ததுக்குச்சாட்சி

நந்திகேசுபரர் சொல்லக்கேட்டேன் சுவாமி
ஞாயனிசமில்லாமல் நான்சொல்லமாட்டேன்
ஆட்டுக்காலது தனை யெடுத்தார் உங்க
ளப்பனென்றவனிமுழு தெங்கும்பழித்தார்
கேட்டுப்பாருமது தாதா ஐயோ ஒற்றை
மாட்டுக்காரனை வைத்திருந்ததும்பொய்யோ
கண்ணுயிரங்கொண்டநேத்தி னெம்மான்
பெண்ணாசைகொண்டல்லோ வந்தவபகீர்த்தி
பெண்ணொருவர்கொடுக்காததினால் னொண்ணன்
பெறுவயிறுகொண்டுவழிக் கரையிலிருந்ததினால்
அண்ணனுமேமத்தளங்கொட்ட சொந்த
அருமைமருமகனின்று கைத்தாளந்தட்ட
விண்ணவர்கள்கூடியே நகைக்க வந்த
வேதியரும்மாதவருங் கண்டுபிர்மிக்க
தேவடியாள்போலுமது அன்னை கூடுந்
தேவசபையிலேநின்று ஆடலையோமுன்னை
பாவலருக்கருள்புரியுஞ்சீலா யிதையும்
பார்த்தவர்கள்சிறியாரோ தங்கவடிவேலா
பத்மாசூரனுக்கு மிகப்பயந்து உங்கள்
பரமசிவனோடலையோ காட்டுவழிநுழைந்து
கைப்பொருளு மில்லாமல்தேகி யென்று
கைப்பிச்சைவாங்கலையோ பரமசிவயோகி
கும்பமுனிக்கருள்புரிந்தோரே யென்று
கூவியேவள்ளிசொல்லி மொழிகளறிந்தாரே
தென்பாகயென்மோகவள்ளி யிந்த
சீமையிலேதிருவடிவருங் குறவர்குலக்கள்ளி
குதிகொண்டவனக்குறவர்சாதி வகையை
கூறறிந்துசொல்லுகிறேன் கேளுமவர்சேதி
சதிர்பெருகுந்திருவிழாக் கடையில் ஜனங்கள்
சந்தடிகளாகவே சயனுக்குமிடையில்
கூசாமல்கூடவேபடுத்து துக்கம்
குலையாமல் பணிதிகளைக்கழற்றியேயெடுத்து
பேசாமலோடுவதுண்டு குறத்தி
பெரியதனக்காரர்களுமே பிடித்துக்கொண்டு

வம்பிலே தலைமயிரைக்கட்டி குறத்தி
மார்பிலேபோடுவார் சொல்லென்றுகிட்டி
செம்பாணிகொண்டுமேயிருத்தி அவர்கள்
சேலையையுரிந்துசின மாகவே நிறுத்தி
அடிதண்டமாகவேயடித்தார் குறவர்
அப்பவுமெடுக்கவுமில்லை யென்றுமேதுடிப்பார்
தடியடிக்கியசையாதசாதி குறவர்
சங்கைகெட்டுநிற்பார்கள் தெரியுமவர்சேதி
என்றிவருரைக்கவுமேமாது சுவாமிக்
கெதிராகநின்றேது சொல்வாளப்போது
தொண்டர்தொழுகின்றமயிலேறுஞ் சுவாமி
சொல்லுவேனுங்கள்குல வளமைகளைப்பாரும்
அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும்
ஆவினங்கள்கூடிவரு மாய்ப் ாடிவாழும்
இடையருடவளவிலென்னுளு உறியி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும்
அன்றுடனசோதையறிந்து வந்து
ஆதினங்கள் கட்டுகின்றகயருல்வறிந்து
ஒன்ருகமாதரொடு பக்கங்கூடி
உரலோடேகட்டினதைச் சொன்னுலும்வெட்கம்
கட்டுண்டதும்ரோஷமில்லையோ பெண்கள்
கட்டியசேலைகளைக் களவாண்டதில்லையோ
வெட்டியசமர்க்களத்திலேரும் கிருஷ்ணன்
விஜயனுடகுதிரைகளை மேய்க்கலையோபாரும்
ஊத்துகிறகஞ்சிகளையெடுத்தார் கிருஷ்ணன்
ஊர்க்காலிமாட்டையெல்லாங் கட்டியங்கேமேய்த் [தார்
கூத்ததிகமுண்டின்னம் நிரம்ப சொல்லக்
கூசுதேயென்மனமு மென்றிவளியம்ப
கேட்டவடிவேலவர்கை நீட்ட வள்ளி
கேளடியுங்களுட வீடுமலைநாட்டில்
நீட்டியிருகால்களை நிறுத்தி அதனில்
நெட்டுமுட்டாவனை கூட்டியேபொறுத்தி
நத்தியகற்ருல்வரிச்சு மழைக்கு
நனையாமல் மூங்கிலிலையால்மேய்ந்தருச்சு

சுத்திவைத்த சுவரெல்லாமோட்டை-யசந்து
தூங்கவும்விடாதங்கு முணுமுணுத்தமூட்டை
ஆடேறிமேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர்தனக்கதிக மிருக்கவிடமில்லை
மூடாதவாசல்களைக் கண்டு-பார்த்து
மூடிஞலுசரவொரு மிருக்கட்டொழுக்குமுண்டு
தேடாத பொருள்சிலவுகாணும்-வைத்த
தீபமுந்தெரியாது தோணுமல்தோணும்
கூடாது குறவீட்டை நம்ப-சற்றே
குந்தவைக்கமுடியாது நசுநசுப்புரெம்ப
குறம்பாடிக் கஞ்சிகளைவாங்கும்-உங்கள்
குறவருடபாக்கியெல்லாங் கூறையிலேதூங்கும்
வரம்பேது மில்லையென்னுளும்-யென்று
வடிவேலர்சொல்லவே வள்ளிமின்னுளும்
தமக்கென்று சிறுகுடிசைகட்டி-குறவர்
தானிருப்பதுவேவசை யில்லாதகெட்டி
உமக்கொரு தலத்தினிலும்நாடி-சுவாமி
ஒண்டயிடமில்லாமல் மலைக்குமலையோடி
கையிலரைக்காசுமேயில்லாமல்-வீடு
கட்டியேகுடியிருக்க வகையுமறியாமல்
வெய்யலிலும் வேனலிலுங்காய்ந்து-சுவாமி
மெத்தவருஷித்தமழை பனியால்கணிந்து
இருப்பதுவைக் கண்டுமனம்வாடி-உமக்கு
யிவ்வுலகிலுள்ளவர்க ளெல்லோருங்கூடி
சிறக்கவேகோவில்க ளமைந்து-உமக்கு
செம்பொன்மணியாபரணம் விருதுகள்சமைத்து
வடிவேலவாவென்று யெண்ணி-உமக்கு
வரிசையிட்டுவைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி
அடியவர்கள் புண்ணியமீதையா- நீரும்
அழகானகோவில்களி லிருக்கிறதுமெய்யா
தேருமதகரிபுரியு மிரவல்-உமக்கு
ஜெயமேளபேரிகையுங் கோயில்களுமிரவல்

ஏறுமயில்வாகனமு மிரவல்-உமக்கு
யிட்டநவரத்னமணி யாபரணமிரவல்
இத்தனையுமுமக்கிரவல் தானே-குறவர்
இருப்பிடத்தைப்பழிக்குறீ ரெண்ணுமல்வீணே
வெற்றிவேலதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொருஆஸ்திகளின் மேலென்னதொந்தம்
மச்சமுனிமறைபொருள்க ளாலும்-உங்கள்
வங்கிஷவகுப்புகளைச் சொன்னுரேகேளும்
மச்சானுமறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொருமாமனு அளவந்ததாதன்
ஆத்தாளோ பாழுகுறப்பறச்சி-அவளுக்
கருமையுள்ளதமையனையும் வளர்ந்தவளுமிடைச்சி
தாத்தாவோமீன்காரக் குரவன்-உமக்கு
தளகர்த்தனுனவனும் நல்லகுலமறவன்
அரனுரென்றுமையீன்ற தய்யா-சங்க
மாண்டியல்லோசாதியிலே சொல்வார்கள்மெய்
வரமுறைகளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள்தெரியாதோ பலசாதிக்கூட்டம்
இதற்குமுன்னே நானறிந்தாலும்-உமக்கு
இசைவேனு நீர்குட்டிக் கரணம்போட்டாலும்
அதற்கென்ன செய்யலாமய்யா-நாங்க
ளானுலுங்குறச்சாதி யென்பதும்-பொய்யா
பண்டாரம் நானென்றுகத்தி-யெந்தன்
பரணெதிரேவந்தீரே யதுவென்னபுத்தி
கொண்டுகுலம் பேசுவதுபோச்சோ-சுவாமி
கொய்ததினைமாவுக்கென கெஞ்சினதும்போச்சோ
பேருதெரியாமலுரு மாறி-வந்து
பிசகுசெய்த மதகரியினுலே-மதமீறி
பாரமதயானை வராவிட்டால்-உமது
பாசாங்குக்குள்ளாகமாட்டே னில்லாவிட்டால்
வழகியிந் தாடிகுறவஞ்சி-யென்று
வனவேடன்போலவந்து யென்னெதிரேகெஞ்சி

களையாகுதெனவந்து முட்டி- நீரும்
காரியங்கள்கொண்டபின் பேசுகிறீர்-கெட்டி
வலியதான்வந்தேனே தொட்டு- நீரும்
வஞ்சகம்பேசுகிறீ ரிதுவென்ன-செட்டு
சலியாமல் நீறுருதிசொன்ன-மொழிகள்
தவறுவரோ கலிகாலமானாலுமென்ன
பொன்னடி துறங்கிய யென்மாமி-பெற்ற
புண்ணியனேயனுதினமு மகலாமல்சாமி
யென்னருகி லிருமென்றுகேட்டால்-சுவாமி
யென்குலத்தைநீர்பழிக்க யுமக்குவிளையாட்டா
வையகத்துக்கேற்காது யென்னை- நீரும்
வஞ்சகமாயிழந்து பேசுவதுதன்னை
தெய்வானையோ சொல்லிவிட்டாள்-எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவுசூது சொல்லிதொட்டாள்
எப்படியோ நானறியவில்லை-லோக
மெங்கும்நீர்போகாத விடமொன்றுமில்லை
இப்படியு மருந்திட்டதாரு-உமக்கு
யேலாதோசொல்லவந்த மங்கையர்கள்பேரு
வருந்திவிருந்தளித்தவளைச் சொல்லும்-அவளை
மயிர்பிடித்துகொண்டாரேன் சற்றேயிங்கேநில்லும்
மருந்திடுமயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்லமாட்டீரோ நானெதுவுங்கேட்டால்
முருக்குவளை தாதிகளேவாடி- நம்ம
முத்துலிங்கசுவாமியே நீ கூட்டிவாபோடி
கருதுமருந்திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனெனுங்கந்தருக்கு கைபார்க்கவேணும்
பின்னரேயென்றிவளுஞ் சொல்ல-எங்கள்
வேலரிதுபுதுமையெனக் கேட்டவருமென்ன
யென்னடிவீண்யோசனைகள் கொண்டாய்- நானும்
எவள்வீட்டிலேயிருந் துண்டதைநீகண்டாய்
என்னுடைய சொல்லுருதிமீதி- நீதியும்
எதிர்பேசினதினாலே யுன்னைதான்சீறி
சொன்னவகையல்லாது கண்ணே-சும்மா.
தோகையேநானுமுனை பேசுவேனோபெண்ணே

மயங்காதே நீவள்ளி மாதே-உந்தன்
மனமறிய நான்சொன்ன தல்லாதிப்போதே
ஜெயமாகதான்போயி வருவேன்-வள்ளி
தினமுமுனைப்பிரியாமல் தெரிசனமுந்தருவேன்
உந்தனைவிட்டகல்வேனோ மானே-யென்று
உபகாரஞ்செய்தங் கிருக்கையாலேதானே
கந்தனையும்கோவிலுக்குள் தேடி-அங்கே
காணுமல்தெய்வானை யம்மன்மனம்வாடி
மங்கையரேசுந்தரப் பிரகாசன்-அந்த
மாணிக்கெங்கைக்கு போனமுருகேசன்
எங்கேயென வேலவரைத்தேடி-நீங்க
ளிதுநிமிஷம்வரவேணு மென்றிடவேயோடி
தாதியர்களெல்லோருஞ் சென்று-எங்கள்
சண்முகவேலாயுதனைத் தேடினுரென்று
ஆதிசிவமாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்தவேலவரைக் கண்டீர்களோயிங்கே
பாதிபிறைநுதலழகி யாகியாளே-அவள்தன்
பர்த்தாவைக்காணேமென்று தேடுவதினுலே
கதித்தபுகழ்கொண்ட முனிவோரே-யெங்கள்
கந்தனையுங்கண்டதுண்டா சொல்லுவீர்நீரே
காணிக்கைகொண்டு வந்தாரோ-எங்கள்
கட்டழகிதெய்வானை மணவாளனுரே
மாணிக்கெங்கை நீராட-யிங்கு
வந்தவரைக்காணீர்களோ யினியெங்கேதேட
பாங்கியவர்நதியெங்குந்தேட-கோவில்
பணிவிடைக்காரர் தெருவீதிவழிநாட
ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
யெங்கேனுஞ்சிந்தையி லறிந்தன்புகொண்டு
நினைவில்மரக்கா தெய்வானை-யிந்த
நிமிஷமேகூட்டிவா வென்றேவுஞ்-சேனை
எனையழைக்க வேணுமென்றுதேடி-வாரார்
ஏந்திழையே நான்போயி வரவும்விடைதாடி
தாடியென்றுசொல்லவே திகைத்து-வள்ளி
தையலரும்சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து

தேடிவந்தபேர்களை நானடிப்பேன்-அந்த
தெய்வானைவந்தாலுமே சண்டைபிடிப்பேன்
என்னுடைய கணவனையுந்தேட-அவளுக்
கென்னவதிகாரம் விடைகேழ்க்குறீரோட
மன்னவாயிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனையுபகாரஞ் செய்தருகில்நின்றே
யெனக்குறியமானே நீகோபம்-இப்போ
யென்பேரில்வைக்காதே வீண்மனஸ்தாபம்
உனக்குநான் பிசகுசெய்வேனோ-பெண்ணே
யோசனைகள்செய்யாதே நான்மறப்பேனோ
போய்வாரேன்வள்ளி தயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடைதாடி தெய்வானையிடமேக
வாய்திறந்துசொல்லுமென மகிழ்ந்து-யென்று
வடிவேலர்கேழ்க்கவே வள்ளியுமுகந்து
மறைபுகழுகின்ற வடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சீலா
இறைவருக் குகந்தமகனாரே-யென்று
யிவள்சொல்லவேலவர்வழி கூடநடந்தாரே
சித்ரவடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்ததாதியர்கள் கண்டடிபணிந்தார்
வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில்
மேவிதெய்வானையையுங் கண்டெதிரேசென்று
மங்கையரே யெனைத்தேடுவானேன்-நம்ம
வள்ளியம்மைதன்னுடைய கோவிலுக்குப்போனேன்
செங்கமலமாதேயென் கண்ணே-யிப்போ
தேடினதுஎன்னவகை சொல்லாயோபெண்ணே
தெய்வானையென்றார் துணிந்து-அந்த
தேவிசெவ்வேள்பாத மலரடிபணிந்து
வைபோகமான வடிவேலை-உடைய
மணவாளாஉமக்குநித மிதுதானோவேலை
இளையாள்மேலிருக்கிற பாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம்
அழையாதவிருந்தோ நீர்காணும்-வள்ளி
யவள்மனைக்குநிதம் வலியப்போகவோவேணும்

முழுக்கவே யும்மாலேயேச்சே-சாதி
முறைதவறிக்குறவருட சம்மந்தமாச்சே
இழுக்கான சாதியிலேகி-மாலே
யிட்டாலுமேன்மையது தருவாரோயோகி
அடிக்கடி நீரவள் மனைக்குப்போனல்-மெத்த
மனக்களிப்பாகவே சொல்லுவாயானல்
குடிதனி லுயர்ந்தவளுமில்லை-வள்ளி
குறவர்குலமானதால் சொன்னேன்சொல்லை
நிசமென்று நீரெண்ணுவீரே-உமக்கு
நேர்ந்ததுவும்வள்ளியுட மோகமதவீரோ
அசையாமலானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டுபேசுகிறீர் நானுனக்குப்பாரி
யாகிநா னெத்தனைகோட்டை-புவியில்
அறியாரோ நீயெனக்குத் தேடிவருந்தேட்டை
தேகியெனவாண்டிபோ லானீர்-சுவாமி
தேவியவள்வள்ளிதினை மாவுதிங்கப்போனீர்
திரிபுவனையருள்பெற்ற பாலா-உமது
சித்தமதுயெப்படியோ கதிரைவடிவேலா
அரிமருகரே யென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன்சொல்லுவார் தெய்வானையெய்க்க
மானே நான் உன்வருதிபெற்றேன்-பின்பு
வள்ளிதன்னைமாலையிட்டு கூட்டிவந்துவைத்தே
தேனேயென்மேற்பிழைக ளில்லை-உனக்கு
தெரியாதேவீணுவில் பேசுவதுதொல்லை
கோவிலுக்கு நீபோடியென்று-யெங்கள்
குமரேசன் சிம்மாதனத்திலேயொன்று
சேவலொரு கையினிலிருக்க-யெங்கள்
சித்ரவடிவேலவரு மேகொலுவிருக்க
சூடாதிவா ராதனைக்கி-வந்து
சூழ்ந்தார்கள் கோடானுகோடியன்றைக்கி
அடியவர்பணிந்து துதிபாட-கதிரை
ஆறுமுகன்மீதினில் கவிமாலைசூட
சிம்மாதனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயன்வந்தார்கள் சூழவேபெருக்க

அம்மாபரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புடன்னருளுவா ராருமுகவேலன்

துன்பவினை யணுகாமல்தானே-நீங்கள்
சுகமாகவாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே

தென்கதிரை வேலரருளாக-வந்த
தேவர்களுமனிதர்களுந் தங்கள்பதிக்கேக

சித்தர்களும்வந்து நிதம்பணிய-யிந்த
செந்தமிழ்தனக்குதவி செய்சுப்ரமண்ய

கர்த்தனருளாலே குறைவில்லை-ஆருங்
கதிர்காமமென்றாலும் வறுமைகளுமில்லை

தேவர்களும் முனிவர்களும்வாழி-யெங்கள்
திருமாலுமயனரனு முமையாளும்வாழி

நாவலரும் பாவலரும்வாழி-வள்ளி
நாயன்மேற்கவியி தென்னாளும்-வாழி

புள்ளிமயில் வடிவேலும்வாழி-யிந்தப்
புவியெங்குநகரத்தார் புகழ்பெறவேவாழி

வள்ளிதெய்வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெருங்கதிரேச ரென்னாளும்வாழி.

கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு
முற்றிற்று.

வேலுமயிலும் துணை,



கதிர்காமத்து யேசல்.

சீர்வளருங்கதிரை நாதன் மேற்சிந்துபாடச்
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சுத்திசிவனைத் துதி பண்ணியே

சத்திசிவனருளும் வெத்திவேலவர்மலர்த்
தாளிணை தன்னைமரவேனே-கந்த
வேலனுமெங்கள்முருகோனே

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன் குருவைப்பணிந்தேத்த-வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த

யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும்

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாகச்
சேவல்கொடிதுலங்கு தேவதையா-இந்த
மாவளமாநகரின் மீதையா

மாவளமானயிந்தப் பூநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகேசன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
அந்தமதகரிமேல் பாரையா-மேவி
யந்தாபவனிவாற தாரையா

அந்தாபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவருவோரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி

சேனாதிபதியிவ ரானையின்மேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனே-வெகு
அருமையாயீன்றவளார் வேலனே

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளே யெங்கள்பரமேஸ்வரி-கைலை
காத்தாளே மங்கைமங்களேஸ்வரி

காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவளென்றீரே
கைலாச நாதர்க்கிவளாரு-யெனக்
கொயிலாக சொல்லுமறுசீறு

ஒயிலாகயீஸ்பரியுங் கைலாசநாதருக்கு
உத்தமிசொந்த மனையாளடி-வாலை
சத்திசிவமென்பார்கள் கேளடி

சத்திசிவனேயவர் பெற்றிடுரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னை யெரித்தாரையா

ஏனெரித்தாரென்றுயே மானேயுடையவர்மேல்
யேதுக்குபாணமதை யெய்தான்-சிவன்
வாதுக்கணலாகவேதான் செய்தான்

வாதுக்கெதிர்த்துவந்தபோது விஜயன்வில்லே
வாங்கிச்சிவனேயடித்தே வைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேன் செய்தான்

தாங்கினதவத்தா லோங்கியபார்த்தனெனும்
தானேபொறுத்தாதருள் சிந்தையார்-இந்த
ஆனேமேல்வாறகந்தன் தந்தையார்

ஆனேமுகமும்பெரும் பாவனேவயறிலங்க
அந்தாயிருக்குராரோ பாரையா-ஒரு
தந்தமிலங்கியவ ராரையா

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்கத்
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமரன்தமையோன் கண்ணே

இனியகுமரனேயுங்கனிவாய் வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளே யேனோ நந்தி
வேஷமெடுக்க விதிதானோ

வேஷமெடுக்கக்கண்டே சியவள்ளியஞ்சி
வேலனுங்கந்தனேக் கொண்டாடினுள்-ஒரு
தாழவன்றிமாலேயிடக் கூறினுள்

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிகுந்தகந்தன்
சங்கையில்லாமல் கெஞ்சிநேரே-குற
மங்கையைக்கூட்டிக் கொஞ்சினுரே

மங்கைகுறவருட சங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி

சொந்தமாய்வேலனுக்கு மிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லேயோ மணமாலே-திருப்
பூட்டவில்லேயோ புவிமேலே

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமணஞ்செய்தாரடி வேலன்-ஆழி
வாமணன் தங்கையருள்பாலன்

மாமணனேமஞ்செய்து தேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை மின்ன-யிந்தத்
தந்திமேலேறிவாற தென்ன

தந்தியிலேறிவார திந்ததிருவிழாவின்
சங்கையது தாண்டி கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே

இங்கேவளமையென்று வெங்கும்பகலைப்போலே
யிருபுறமும்ஜனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கற்பூரதீபமதை தூண்டி-வாரூர்
சுப்பிரமணியனுக்கே தாண்டி

தாண்டியுபசரித்து வேண்டிதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா

சித்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர் நகரத்தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப் பாரடி

நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்று லவர்யாரு-அவர்
புகழ்பெற்றிருப்ப தெந்தவூரு

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண் ணூற்றுறூராடி-வெகு
பாங்குள்ள நாட்டுக்கோட்டையாரடி

நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானையா

தானையாவென்றுசொன்ன மானேகொழும்தனிலே
சந்தோஷமாகவேயா பாரமும்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும்

என்னேரமுங்கொழும்பில் சொர்னயாபாரஞ்செய்த
இந்தக்கதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமாதப்
பௌரணைக்கே வருவாரடி-யிங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி

வருஷங்கள்தோறுமிங்கே வருவாரானாலுஞ்சொந்த
மானகர்க்கேகினு லப்போதுகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண்

ஆருகாணென்றாய் புகழேரும்புதுகணக்குக்
காகவந்த நகரத்தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள்

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிகுந்தவரே தோணும்-நல்ல
கல்விமிகுந்தவரே காணும்

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே

நாட்டுக்கோட்டையாருக்கு தீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேதையா

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவராமற்செய்துவந்த தோதினால்-புவியி
லிவரேநகரத்தாரென் ரோதினார்

இவர்களைப்போலநகர் எவ்வளவுதர்மஞ்செய்தார்
யேனையோகாணுமந்த நாளிலே-அப்போ
தானவர்க்கந்தபே ரேனில்லை

பேர்புகழ்சரிகைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதினால்நகரத்தாரே யென்று
யெத்தலத்திலு முறைத்தாரே

எத்தலத்திலும் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானையா-பொன்னால்
சிறக்கவலங்கரித்த தாரையா

ஆரென்றுய்பெண்ணே யெங்கும்பேருனதென்மதுரை
ஆலயத்தைப்புதுப்பித்த தாரடி-வடி
வேலனருள் நகரத்தாரடி

வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனுர்-சபை
யாவும்புதிப்பிக்கிற தாரையா

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
புவியிற்புகழ் நகரத்தாரடி-மூகில்கள்
குவியும்தண்மைபோல்கொடை யாரடி

கொடையார்கள்தர்மம்செய்யசடையாரோவாணிபத்தில்
கூடும்முயற்சியுள்ள வாழ்விலோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர்

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம் நிலைநாட்டினுர்-நித்தியம்
சுபஜெபமங்களத்தைச் சூட்டினுர்

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேற்
சொன்னகவி யெங்கும்-பிரகாசம்
மன்னவருக்கெந்த தேசம்

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணி தானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி

நானடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினங்களெப்பகாணும்-அத்தைச்
சொல்லநாமிங்கே வரவேணும்

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திக்கித் தானடி-வந்தால்
பாதங்களகன்று போமடி

பாதகந்தன்னைப்பரி காரமேசெய்யுங்கந்தன்
பாதகந்தனைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும்

காணுந்தவமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி

வாகன்செந்தூரானென்ருல் வையாபுரிப்பழனி
மாமலேமே லிருப்பதாரு-நல்ல
சாமிமலேக்குகந்த தாரு

சாமிமலேமுதலாய் பூமிதனிலுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி

ஆண்டிக்கிவ்வுலகெல்லாம் வேண்டிபதியென்ருல்
அத்தலங்களிலேது காணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோணும்

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார்

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில் செல்வாரோ நாமும்
கேட்டவரங்கள் தருவாரோ

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்மருக ஞர்க்கே-யெண்ணி
வாசமாய் நம்பி வந்தோர்க்கே

வாசமுடனேகதி ரேசனேத்தொழுதிட
வாருமையாபுகழ் வாழி-யினி
கூறும்ஜெயமங்களம் வாழி

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானே
வாழியடியவர்கள் வாரு-யெங்கள்
மோழிக்கொடிகுலமும் வாழி.

கதிர்காமத்து ஏசல் முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

கதிர்காமக் கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்

ஆறுமுகன்கதி ரேசனின்மேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனின்மேல்

மங்களஞ்சேருங் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட

சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே

சுந்தரநீரணி ஆறுமுகன்மீதிற்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்

சிந்தைக்கிசைந்தவேளை வாழ்த்திக்கவி
செப்பும் புலவர்களைப்போற்றி

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க

வந்துதவிசெய்ய வேணுமம்மா நானும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா

கந்தன்கதிர்காம வேலவனேபுவி
கார்க்குமறைபுகழ் லோலனே

யெந்தனுக்கேயானு கூலனேதொழு
தேத்திப்பணியும் சீலனே

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்கக்கங்கை நீராடுங்கடி

சிங்காரமாய்ப்பணி பூட்டுங்கடிமுகம்
சிறந்தகுங்குமந் தீட்டுங்கடி

கூந்தலுக்கேமலர் மாலைகட்டி நல்ல
கோலவர்ணபட்டுச் சேலைகட்டி

சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக் கொண்டாடுங்கடி

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த

செய்யிழைமார்களே வாருங்கடிகவிச்
சிறப்பைச்சொல்லுகிறேன் கேளுங்கடி

ஓதியசெந்தமிழ்ப் பாடிடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லுக் கொண்டாடிடவே

யேதுபிழைகளிருந்தாலுஞ் சுவாமி
யேழைக்கிரங்கி யெனையாளும்

ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளும்கதிர்காமவ் வூருடையான்

சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தகர்கள்போற்றிய காலுடையான்

சத்திக்குகந்த மகன் நானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே

யெத்திசையும்புகழ் மால்மருகன்றன்னை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ் சந்தோஷத்திலே

ஆசைமிகுந்துழ வேந்தினர்சென்னல்
அள்ளியவறெங்கும் தூத்தினர்

சென்னல்களெல்லாம் வளைந்திருக்குமெங்கும்
சிங்கள நாடு மகிழ்திருக்கும்

கன்னல்தழைத்தெங்கும் முந்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்த்தோணும்

மாவுங்கொயாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்

கூவுங்குயில்மயில் கூட்டம்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும்
கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மதை கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும்
மாணிக்கக்கெங்கையா ரோடுவதும்நித்தம்
மாதவர்வந்து நீராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே
வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும்
குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும்
என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தின்
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர்
நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள்
புத்தமதத்தி லுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்த மிகுத்தவர்கள்
நித்தமும்சிங்களவர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும்
தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்பர
நேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமைசொல்ல நல்லதடி

யெண்டிசைதோறும் புகழ்வார்கள்கொழும்
பெங்கும்சிறந்த புகழ்வார்கள்கொழும்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி
செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெத்தவண்டி
சிங்காரமாகிய வேலனடி அவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி
சிறப்பைச்சொன்னவ ரேகாணும் அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்
யிருப்பதெந்த விடங்காணும் அதற்
கெப்படிபோனால் நடந்தோணும்
கண்டிகொழும்பு மிருப்புதெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியிலத் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச் சொல்லவும்வேணுமையா
சொல்லுகிறேன்கேளடி மின்னுளேதேவர்
சொன்னசபதத்தாலே முன்னாலே
வெல்லவேமாருதம் வீசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே
வந்துவிழுந்த யிடமாச்சுதேயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும்
ஏழுசுற்றுக்கோட்டை யாக்கியேயிதற்
கிலங்கையென்னும்பேர் தாக்கியே
ஆளுமென்றுபண நற்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே
ராணுவந்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்றென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே
கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்

நின்றுகடலைக்கண்டே திகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான்
சீதையினாலே மனமுகந் தூராமன்
குதர்ப்பாசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரி யெல்லைகண்டுறுதி
பரப்பிலேபத்து யோசனையாய்க்கவிப்
படைமலைகொண்டதற் கிணையாய்
உரத்துயோசனை நூறுவட்டும் அணை
உண்டுபண்ணிலங்கைக் கோட்டைமட்டும்
நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியத்திரு
வணைசிதறுண்டு தான்மறைய
பின்னாலிலங்கையைச் சீராக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்பேராக்கி
அன்னாள்விபீஷண னுண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார்
நாட்டமுள்ளகயற் கண்ணாளேவெங்கை
நகரம்நாள்சென்று பின்னாலே
கோட்டையழிந்து கடலாச்சுயிது
கொஞ்சமாய்த்தீவிங்கே துண்டாச்சு
அப்பாலித்தீவு சீரில்லாமலிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சுபெரி
யோர்களுலாவு மிடமாச்சு
நயமிகுந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்யிதில்
யிருந்தரசிட்டான் யேச்சவனும்
நத்தியேநாயர் சிலகாலமேல்
நாட்டையாண்டு வருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினார்சிலர்
புத்தமதத்தைக் கொண்டாடினார்

திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெற்ற ஞாயாதி
விஜையராஜனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி
தலைமன்னாரென்று பேட்டைகண்டிராஜன்
தம்பனைநாடென்று கோட்டைகட்டி
சிலைவலியைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர் மார்கள்கூட
செப்பமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்
அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேரடி
வங்காளர்சிங்காளர் வெள்ளாளர்
மதசமயத்து வல்லாளர்
யிங்கேவந்துகுடியேறினார் யிதற்
கிசைந்தரசரு மீறினார்
சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமையமு முண்டாச்சு
மங்கையரேசில ராஜாக்கள்புத்த
மதசமயத்தை மேலாக்க
பாண்டிசேரசோளத் தீரர்களும்வந்து
பாண்டமாண்டமா வீரர்களும்
வேண்டிகோட்டைகள் கட்டிக்கொண்டார்மதம்
வேறுசெய்யச்சண்டை யிட்டுக்கொண்டார்
பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டுஅந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு
உன்னிதமான மலையுமுண்டுயிதி
லோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்பரம்வெகு முக்கியமாம்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம்
கேட்டவர்க்கேயனு கூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்

நாட்டமுள்ளறகு வேவ்ஸபரமாம்சிவ
நாதர்க்குகந்தகோ ணேவ்ஸ்புரமாம்
நண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமெய்த்த குமாரபுரம்புக
ளிலங்கும்சந்திரசே கரபுரம்
கண்டவர்மெய்த்த மாவிட்டபுரம்ராம
கர்த்தரால்செய்த தனேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்பின்னும்
தோணுதிருப்ப தனேகமதாம்
ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடிமின்னே
ராமனுதனு லமைந்ததடி
பூமிக்குறித்தான மெத்தப்பட்டம்
பூண்டரசிட்டி நகரமெத்த
கண்டியென்றும்கோட்டைக் காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியஊரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராஜபுர பட்டணமாம்
முத்துச்சலவைத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டுஅதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு
பன்னகாமமதும் பறைநாடாம்யாழ்ப்
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகமெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை
கண்டவிடமெல்லா மூராச்சுகோயில்
கட்டியகட்டடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பழி கொண்டார்கள்நல்ல
சிங்களரோடர சாண்டார்கள்
கண்டியைகண்டிடும் வீரதுங்கன்யிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
தலைமுறைவரை ராஜர்களும்

தொண்ணூற்றுமுடி மன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்கள்மெய்த்திடு மானகரில்யிதில்
மேவியரசிட்ட பேரவரில்
கண்டியரசனும் மின்னாலே
கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனதியாய்க் காரனடி அவன்
வம்மிஷம்நாய்க்க ராஜனடி
அதற்குமுந்திய ராஜர்தொட்டுக்கட்டி
ஆண்டவிதமெல்லாம் சீறுகெட்டு
மதிப்பதாக்கிடந் தோணுமலைக்காடு
மண்டியிருப்பதுந் தானுமே
இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
இலங்கைகடெல்லாய ராஜசிங்கன்
சங்கையுடனரசாளையிலே சீமை
தன்னிலிருந்த வேளையிலே
சிங்காரக்கப்பலில் பறங்கியேயிந்த
தீவுக்குள்வந்து யிறங்கியே
தங்கச்சிகரம் தனைவருத்தும்புத்தர்
தாவுங்கழனித் திசையடுத்து
கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
கொழும்பென்றுசொல்லிப் பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காளிக் கோட்டைகட்டி நல்ல
விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி
தொட்டதிருக்கோண மாமலையும்அந்த
துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்தள்ளி விரைவாகவந்து
உலர்ந்ததாக்கார ருசாராக
ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிறுநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்த
தும்பமுனியார்வந்து ஒட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்

வம்பானகாட்டையும் வெற்றிலுற்ருர்கோடு
வங்காளக்கச்சேரி கட்டலுற்ருர்
கண்டியரசனைத் தெரிந்திட்டார்பெருங்
கள்ளர்களைச்சுட்டு யருந்திட்டார்
வண்டிக்கிரோட்டுக ளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி
துறைமுகங்களை நேராக்கிகாப்பித்
தோட்டங்களையெல்லாம் சீராக்கி
நிறையயிந்தியாச் செனங்களும்வெகு
நிறைந்ததீர்வைப் பணங்களும்
மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபீசை முந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேயிந்த
இங்கிலீஷ்காரர் தன்னரசை
பூட்டிரயிலையும் நடத்தினர்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டீகமான கடலலைக்கியூட
தடுத்தணைகட்டி யேநெருக்கி
தண்டவாளகூட்சம் வைத்தாரோமலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
கங்கையும்சிங்கார முண்டாச்சுவெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு
பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால்ஒரு
தாழ்வொன் றுமில்லையே தோழிப்பெண்ணே
தாழ்வில்லாத்தண்மை யுடன்வாழும்கவி
சாற்றிய மன்னவரேகேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா
ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டு மின்னேரத்திலே
கூறவுங்கேளுங்கள் பெண்ணுரேவர்ண
கோலவிழிக்கயல்க் கண்ணுரே

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேதா யுகத்திலே
கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே
பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட
வாசமுள்ளரசு நாளையிலேஅவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசரைவீடு மிதில்தாண்டிகந்தன்
படைப்பெருக்கமிதில் தாண்டி
குன்றெனும்சூரரைத் தாக்கினர்தேவர்
கோனுக்கரசை யுண்டாக்கினர்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி
காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதி;
காமமென்றபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டுவந்தநம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி
மன்னவரேகவி சொன்னவரேயிங்கு
வாருமையா சொல்லக்கேளுமையா
மின்னியவேலவரை வாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற
விளங்கும்தீப தெரிசனமும்நவில
மேளம்தவண்டை முரசினமும்
முழங்கச்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி
மூலஸ்தானந் தெரியாமலேசபை
முன்ஸ்தலமண்டபத் தோணுமே
சீலமிகுகந்தன் சன்னதியிலிட்ட
திறைமறைப்பிங்கே யேதுக்கையா
திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி

முறைதெரியாத மானிடர்க்குகந்தன்
முன்மணிவாசலுந் தோணுது
முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன் தன்னை
நானறியவகை சொல்லுமையா
நானுமறிந்தது மில்லையடிசொன்னால்
நம்புவையோ வெந்தன்சொல்லையடி
தேனருந்தவழி தோணுவிட்டால்சந்த
சேருவை காணமுடியாது
சேருவைகாண முடியாவிட்டால்இந்தச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல் நித்தம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள்
ஆருக்கென்றால்வர்னப் பேளையொன்று அதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி
பவனிவந்திடும் பேளையதுயென்ன
பாவினையாகவே சமைந்தது
அவனியெல்லாம்புகழ்ந் தேற்றபேளைக்
கருள் நிறைந்தது மெவ்விதங்காண்
அருள் நிறைந்தது சரைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறியறிந்து துலங்காவிட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே
வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரதட்டோடு போடாமல்
தெள்ளியமாமணிமேடை யெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா
செப்போடல்லவோ தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி

செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
சீர்திருத்தவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா
அறிந்ததுண்டைய னுத்தரவால்பன்னீ
ராண்டுக்கொருதரு மாத்தினவர்
உரியசுத்தமவு னங்கொண்டுசமா
துகந்தடைந்தவர் கோடியுண்டு
கோடிபேருண்டென்றும் சொன்னவரேகந்தன்
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண்
சேகரமான மலைகளுண்டுசுத்தி
திரண்டுருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி
போனவரந்த மலைவளத்தைச்சொல்லிய
புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனலவ ரெப்படிப்போனார்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண்
ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கைய னுத்தரவி னல்தாண்டி
யேகினலந்தக் கதிர்மலைக்குவழி
யிசையத்தோணு மிருள்விலகி
யிசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்குச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவிழி விட்டிடுமோ
விட்டுவிடாதது மெய்யதற்கேகதிர்
வேலவனுத்தர வாவதற்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம்
நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை

அடர்த்தமேளத் தொனிகளுண்டேயங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ
அண்டர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவுந்தோணுது தோழிப்பெண்ணே
தோணுதென்றுது மெய்யவரும்இருள்
சூழ்ந்தவனங்கள் கடந்துவரும்
காணுதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ
கண்டுதொழுவ தெல்லாமலையும்எங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால் கண்டபேருமில்லை
அங்கேதுடிவயிரவன் காவலடி
காவல்கொண்டமலைச் சார்பினிலேஎங்கள்
கந்தர்பவனிப் பதியினிலே
மேவுஞ்சமாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குவகை
சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியாதீதத் துறைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
ராஜரால்கட்டிய கோவிலடி
கட்டியகோவிலச் சிறந்ததிலேகதிர்
காமச்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமிங்கேது சொல்லுமையா
முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசிலீன்கள் நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி
தீனதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலன் சன்னதியில்
தானதர்மமும் செய்யவென்று அன்னச்
சத்திரமும்கட்டின தார்காணும்

கட்டியமாமடம் செட்டியடிதர்ம
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புகழ்
உயர்ந்ததர்ம மடம்சமைத்தார்
உயர்ந்ததர்ம மிகுந்தோர்கள்செல்வ
மோங்கும் வைசியகுலத்தார்கள்
இசைந்துவந்தவரைத் தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி
நாட்டியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலே யிவ
ராண்டுக்கொருதரம் வாறதுண்டு
வாறதுண்டுநகரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ
முக்கியமாய்க்கதிர் காமத்திலேசுற்றி
முக்கோணச்சக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி
கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடத்துகின்ற வளமையென்ன
வளமைவேழத்தின் மேல்மிகுந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
கத்தன்பவனியைப் பாருங்கடி
கந்தனுக்கொத்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வருநாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா
தேருமேலேறும் வழமையில்லை சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை

தேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீரறுப்பானதைப் பாருங்கடி
நீரறுப்பென்றதும் தோன்றலேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கலேயே
தேருமின்னாட்டு வளமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா
சீருள்ளமாணிக்கக் கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்கையிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீரறுப்பென்பதும் மெய்தாண்டி
மெய்யான ஆறு முகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையெனும்
தையலர்மேவும் கதிர்காமம்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ
முத்தியுண்டங்கு நினைத்தாலுந்தவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பிணி
சேராதருள்வார் முருகேசன்
கேசவன்தன்னரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிகுந்த தமிழ்களைச்சொன்ன
மன்னவரேயுமக் கெந்தவூரு
மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மாநகராம்திருப் புல்லாணி
நன்னயமாகிய ஊர்தாண்டிதங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி
பேரையுமூரையு மேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்த
தாருலவுங்கதிர் காமத்துக்கேநீரும்
தானிங்கேவந்த வயணமென்ன
வந்துகொழும்பதனிற் சிறந்துவெகு
வாசமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி

கைதொழுதேத்தியே மெய்வாசன் நம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனின்மேலினி
செந்தமிழால் துதி சொல்லுமையா
சொல்லச்செவியுற்றுக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்றிப் பாட்டவர்க்கும்
தில்லையெல்லாம்வல்லத் தாண்டவத்தால்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால்
அருள்பொருந்திய பூவரசன்வள்ளி
யம்மைதெய்வானை கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம்
தீராநோய்களை தீர்த்தவண்டிசுவாமி
சித்தம்வைத்துதம்மைக் கார்த்தவண்டி
நாரணனுக்கு மருகனவன்ஜெக
நாதன்செந்தூரு முருகனையன்
தேவசேனாதி பதிதாண்டிகூடவும்
சித்திரசேவல்க் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சந்நதியில்நின்று
முழங்கக்கும்மி யடியுங்கடி
சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர்காம முகந்தவரை
யிம்மானிலத்தவ ரேற்றியேஅவ
ரெண்ணியிருந்த படிதோற்றியே
செலுத்தும்வேடிக்கை பாருங்கடிகந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் பெத்தவண்டிகந்த
சாமிக்கிசிங்காரம் நித்தமடி
முப்பத்துமுக்கோடி தேவருக்குநல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்திரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும்
சிங்காரக்கும்மி தமிழ்ச்சிறக்கும்நம்ம
செங்கைவேலன் கதிரேசனுக்கும்

மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்கம்வாழி மிகவாழி
சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னிதியில்புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம்.

மங்களம்.

ஆதிபரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வேலவர்க்கும்
சுபமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்
மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர் காமம்வாழ் முருகையர்க்கும்
சுபமங்களம்
செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனறு முகன்வேல முருகையர்க்கும்
சுபமங்களம்.

கதிர்காமக் கும்மி - முற்றிற்று.

இதில் கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு கதிர்காமத்து யேசல் கதிர்காமக்கும்மி மங்களம் இவைகள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகவிளம்பரம்.

நாகபூஷணம்

கற்பை விளக்கும் அற்புத நாவல்.

இந்த நாவல் இரத்தினம் பாரததேயத்து மாதர்கள் தங்கள் கற்பையும் புருஷரையும் காப்பாற்றுவதி னிமித்தம் எவ்வித ஆபத்து வந்தாலும் கருதாமல் உண்மையை வெளிப்படுத்துவதில் மிக்க ஊக்கமுடையவர்கள் என்பதை விளக்க இந்த நாவல் பல அத்தாட்சிகளோடு விளங்குகிறது. இக்கதா நாயகியான நாகபூஷணம் தன் புருஷனுக்கு வந்த ஆபத்தைத் தடுக்கத்தானே வக்கீல் வேடம் பூண்டு மதிமன்றம் வியப்புறும்படி வாதித்து ஆபத்தில் சிக்கிய தன் புருஷனைக் காப்பாற்றுவதோடு உண்மைக் குற்றவாளிகளையும் வெளிப்படுத்துகிறாள். கதை முற்றிலும் வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கும். கோர்ட்டு விவாதம் வெகு ருசிகரமாயும், சாமர்த்தியமாயுமிருக்கும்.

இதன் விலை அணா 12.

விநாயகபுராண வசனம்

எக்காரியங்களும் விக்கினமின்று நிறைவேறும்பொருட்டு சகலராலும் வழிப்பட்டுவருங் கடவுள் விநாயகபெருமானே யாதலால் அன்னவரின் திருவிளையாடல்களும் அவரைப் பூஜித்து முத்தியடைந்தவர்கள் சரித்திரங்களும் அவரைப் பூஜிப்பதற்குரிய சோடசம் அஷ்டோத்திரம் சகஸ்ரநாமங்கள் முதலான மந்திரங்களும் தெளிவான தமிழ்நடையில் எழுதி சகலரும் வாசித்தறியும் பொருட்டு உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 4 0 0

தாயுமானவர் பாடல் உரை.

இம்முறை அச்சிட்ட தாயுமானவர் பாடல் மூலமும் உரையுமாகிய புதிய பதிப்பில் ஒவ்வொரு பாட்டின் பதவுரையும் பாட்டின் கருத்தை எளிதில் விளக்கக்கூடிய சூட்சுமமாகிய கருத்துரையும் எழுதிச்சேர்த்து நாணயமான கிளேஸ் கடிதத்தில் புது அச்சுகளால் மிகவும் தெளிவாக அச்சிட்டிருக்கிறது.

புல் கலிலோ பயிண்டு விலை ரூபா 3 4 0

இட்டா-பார்த்தசாரதி நாயுடு அண்டு சன்ஸ்,

நெ, 189, தங்கசாலை தெரு, மதராஸ்.